# அறிவித்தல்

“புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை (திருத்தம்)” எனும் சட்டமூலம் சம்பந்தமான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

அரசியலமைப்பின் 122 (1) (ஆ) ஆம் உறுப்புரையின் பிரகாரம் தேசிய நலனைக் கருதி அவசரமானது என அமைச்சரவையினால் சான்றுப்படுத்தப்பட்ட இச் சட்டமூலம் விசேட தீர்ப்புக்காக மேதகு சனாதிபதி அவர்களால் உயர் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

அரசியலமைப்பின் 123 ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றமானது, இச் சட்டமூலமோ அதன் எந்தவொரு வாசகமோ அரசியலமைப்பிற்கு முரணானது அல்லவென்று தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிடுதல் வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.